2000 மே 11]

599—

நவீன விளையாட்டுச் சாதனங்கள்

***33124—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் வெளிநாடுகளில் உள்ளதுபோல் பெரியவர்களும் உல்லாசமாக விளையாட இராட்சச இராட்டினம் போன்ற நவீன கால விளையாட்டுச் சாதனங்களை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) அதனால் பல்வேறு நாட்டுப் பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் பயன்படுத்தி நல்ல வருமானத்தை அளிக்க வாய்ப்பு உள்ளதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டில் உள்ள பெரியவர்கள் உல்லாசமாக விளையாட இராட்சச ராட்டினம் போன்ற நவீன கால விளையாட்டுச் சாதனங்களை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மை வாய்ந்த கலைநுட்பம் கொண்ட, மிக அற்புதமான கோயில்களும், எழில் கொஞ்சும் மலைவாசஸ்தலங்களும், ஏழைகளின் ஊட்டி என்று சொல்லக்கூடிய ஏற்காடும், உலகிலேயே இரண்டாவது மிக நீளமான கடற்கரையைக் கொண்ட சென்னை மாநகரும் உள்ள இவ்வளவு சிறப்பு வாய்ந்த தமிழகத்திலே அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுக்கக்கூடிய வகையிலே மிகச் சிறப்பான முறையிலே அதைச் செயல்படுத்த வேண்டும். இந்த ஆண்டு எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் நம்முடைய தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்துள்ளார்கள்? அவர்கள் மூலமாகக் கிடைத்த அந்நியச் செலாவணி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு வருகை தந்திருக்கின்ற சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை—வெளிநாட்டுப் பயணிகளுடைய

எண்ணிக்கையைப் பொறுத்தவரையில்--சுமார் 7¼ இலட்சம். அதேபோன்று, உள்நாட்டுப் பயணிகளைப் பொறுத்தவரையில், சுமார் 2 கோடிக்கு மேல் வருகை தந்திருக்கிறார்கள். எவ்வளவு வருமானம் வெளிநாட்டுப் பயணிகள் என்ற முறையில் கிடைத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 600, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

600—

தொழிற்கூடங்கள்

***28195—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரத்தில் காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கும் பொம்மைத் தொழிற்கூடங்களைக் கதர்த் தொழில் வாரியத்தின் மூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்தில் காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கும் பொம்மைத் தொழிற்கூடங்கள் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பகுதி என்பது எவ்வித தொழில் வசதியும் இல்லாத மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே ஒகேனக்கல் என்று சொல்லக்கூடிய ஒரு சுற்றுலா மையம், பொது மக்கள் தினந்தோறும் அதிக அளவிலே சென்று வரக்கூடிய நீர்வீழ்ச்சி கொண்ட பகுதியாக அமைந்திருக்கிறது. அங்கே சுற்றுலா மையங்களில் இருக்கின்ற கடைகளிலே குழந்தைகள் விளையாடக்கூடிய பொம்மைகள் மற்றும் அழகுப் பொருட்கள் எல்லாம்